# மாவலி

Mahavali

මාවැලි

இந்த
இதழில்...


நல்லதைச்
சொல்லி ...
அடிதடிக் கதை..
புதிய சக்தி.
பிரதமருக்கு ..
செய்த
துரோகம்.
அங்கத்தவர்
களுக்கு.
முகப்புப் படம்.
சங்கச் செய்தி.
இன்னே.
சுற்றுப்புறம்.
வாழ்த்து.
வேலை நீக்குச்
சட்டம்.
கதறி மனம்...
கேள்வி - பதில்.




ஏப்ரல் - 1974

சதம் 50.

தொழிலாளர் தேசிய சங்க வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவலி




தொழிலாளர் தேசிய சங்க வெளியீடு

ஊற்று: 1 ஏப்ரல் - 1974 ஓடை: ப


"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

— பாரதி.

## நல்லதைச் சொல்லி - கெட்டது செய்தல்.

ஒரு கெட்ட காரியத்தை நல்ல நோக்கைக் காட்டி செய்வது பற்றி கேள்விப்பட்டிருக்கின்றோம். நாட்டு மக்களின் நலனுக்காக தேயிலைத் தோட்டங்களைச் சுவீகரிக்கின்றோம் என்று கடந்த இரண்டு வருடங்களாக எடுத்து வரும் நடவடிக்கைகள் இவைகளில் ஒன்று.

தேயிலைத் தோட்டங்களை சுவீகரிப்பதற்கு ஏற்பாடுகள் நடத்திய போது தொழில் சங்கங்கள் எந்த வித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. ஏனெனில் இந்த சுவீகரிப்பின் மூலமாக ஜாதிக் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடிய பயங்கரமான வித்து இந்தச் செய்தியில் புகுத்தப்பட்டிருந்தது. தப்பித் தவறி யாராவது தோட்டச் சுவீகரிப்பின் மூலம் தோட்ட தொழிலாளர்களுக்கு தீமை இழைக்கப்படுகின்றது என்று கண்டனம் தெரிவித்து இருந்தால், அது சிங்கள மக்களுக்கு விரோதமாக எடுத்த துரோகச் செயல் என்று பழிசுமத்தி இனக்கலவரத்திற்கும் வழி வகுத்திருக்கும். எனவே கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் தோட்ட சுவீகரிப்பால், தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட சகல இன்னல்களையும் மகஜர் மூலம் முன்னனி தொழில் சங்கங்களும் அவைகளோடு தோழமை கொண்ட நடுநிலை சங்கங்களும் பிரதமருக்குசமர்ப்பித்தன. இந்த மகஜருக்கு இது வரை பரிகாரம் கிடைக்கவில்லை.

தோட்டங்களை சுவீகரிக்கும் அமைச்சர் "இந்த நிலங்கள் சிங்கள மக்களிடமிருந்து பறிக்கப்பட்டவை. அவைகளை மீட்டுக் கொள்கின்றோம்" என்று சொல்லும் கூற்று உண்மைக்கும், சரித்திரத்திற்கும் நேர்மாறானது. இப்போது எடுக்கப்பட்ட பல தோட்டங்கள் அந்தக் காலத்தில் மனிதர் நடமாடாத காட்டுப் பிரதேசங்கள். பலவை கணவாய்க்கு மேல் எந்த வித விவசாயமும் செய்யப்படவில்லை" என்று சரித்திரம் கூறுகிறது.

காணி அமைச்சர் இப்போது எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு அமைச்சர் குழு கூட்டுப் பொறுப்பு எடுத்துக் கொண்டு இருக்க வேண்டும் அமைச்சர் குழுவில் நாலு நாடறிந்த இடது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரி தொழில் சங்க பிரபல தலைவர்கள் இருக்கின்றார்கள். அதோடு மலைநாட்டுச் சார்பாக ஒரு ''நாலும்'' தெரிந்த நியமன அங்கத்தவரும் தேசிய சபையில் இருக்கின்றார். தோட்டச் சுவீகரிப்பின் காரணமாக எழப்போகும் பல பிரச்னைகளை அமைச்சர் குழு தேசிய சபையில் பேசாது, தங்கள் சங்கங்களின் மூலமாக காணி அமைச்சரின் நடவடிக்கைகளைக் கண்டிப்பது விசித்திரமல்லவா ?

கூட்டு முன்னனி சர்க்கார் தன் கொள்கைக்கு ஏற்ப தொழிலாளர்களுக்கும்—தொழில் சங்க வளர்ச்சிக்கும் நல்ல வசதிகளை செய்துள்ளது. முதலாளிமார் தொழில் சங்கங்களை அங்கீகரிக்க வேண்டும். தொழிலாளர்கள் தொழில் சங்கங்களை தோட்டங்களுக்குள் நடத்துவதற்கு தடைகள் இருக்கக் கூடாது—தொழில் சங்கப் பிரதிநிதிகள் அங்கத்தவர்களை பார்க்க தங்கு தடையின்றி செல்ல சட்டம் ஏற்படுத்தப்பட்டது—தொழில் சங்கச் சந்தாவை செக்ரோல் மூலமாக வசூலித்து அனுப்புவது—வேலை நீக்கச் சட்டத்தை மாற்றி அமைத்தது. இது போன்ற நன்மைகளைச் இந்த அரசு செய்திருக்கின்றது என்பது எல்லோருக்கும் தெரிந்த விசயம். தொழிலாளிக்கு கிடைக்க வேண்டிய சாசனத்தின் ஒரு பகுதி என்று இவைகளைக் சொல்லலாம். ஆனால் காணி அமைச்சர் இந்த அரசின் தொழில் சங்க ஜனநாயகக் கொள்கைக்கு நேர்மாறாக, தொழில் சங்கங்களுக்கு ''சாவு மணி'' அடித்துக் கொண்டு வருகின்றார்.

இவர் சுவீகரித்த தோட்டங்கள் மூன்றுவகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

I கிராம விஸ்தரிப்புக்கு
II கூட்டுறவு சங்கத்திற்கு
III விவசாயம்—கூட்டுப்பண்ணைக்கு

இவை மூன்றிலும் தொழில் சங்க உரிமை பறிக்கப்பட்டுள்ளது. மறுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மலைநாட்டுத் தொழிலாளர்கள் நாடு அற்றவர்கள். பிரஜா உரிமை, ஓட்டுரிமை இல்லாத காரணத்தால் நாதி அற்றவர்களாக இருக்கின்றார்கள். அவரைச் சீந்துவதற்கு யாரும் இல்லை. தொழில் சங்க உரிமை இருக்கின்ற காரணத்தால் மட்டுமே அவர்கள் மனிதர்களாக உயிர்வாழ முடிந்தது. இப்போது காணி அமைச்சர் அதற்கும் ''உலை'' வைத்து விட்டார்.

பெரிய தொழில் சங்கங்கள், தலைவர்களது வாகனங்களாக அமைக்கப்பட்டுள்ளன. நடுத்தரமான தொழில் சங்கங்கள் தனித்து நின்று போராட்டம் நடத்தற்கு வழிவகைகள் இல்லை. எனவே இந்த அநீதியை நேர்முகமாக கண்டிக்க முடியாது. மகஜர்கள் மூலமாகவும், பேச்சு வார்த்தைகள் மூலமாகவும் எடுத்துச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. தோட்டச் சுவீகரிப்பு, மாதச் சம்பளம் போன்ற முக்கிய பிரச்சனைகள் பற்றி பிரதமரைச் சந்திக்க ஏற்பாடுகள் நடக்கின்றது. பிரதமரைச் சந்திக்கும் பொழுது தொழிலாளர் தேசிய சங்கப் பிரதிநிதிகள் பாரபட்சமின்றி தொழிலாளர்களது உண்மை நிலையை ஸ்ரீணித்தரமாக எடுத்துச் சொல்வார்கள்.



# அடிதடிக் கதை பரவ சுரண்டி வாழும் சுயநலப் புலிகள் முதலைக் கண்ணீர்விட

( வி. கே. வெள்ளையன் )

6 - 10 - 1971

தொழிலாளர்களின் தியாகத்தால் வீரத்தால் வேலை நிறுத்தங்களால் தங்களின் ஜனநாயக உரிமைகளை பெறுகின்றனர். தொழிலில் ஜனநாயகம் பொன்னொளி வீசுகின்றது. தொழிலில் ஜனநாயகம் தொழிலாளர்களின் உயர்ந்த சம்பளத்திற்கும், உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்கும், உயர்ந்த அந்தஸ்துக்கும் வழிவகுத்துள்ளது. மக்கள் வாழ்வு மலர்கின்றது. ஜனநாயகமும் சமதர்மமும் உயர்ந்து வளர்கின்றன. மக்களுக்கு அரசியலிலும், பொருளாதாரத்திலும், சமூகத்திலும் சம உரிமை கிட்டுகின்றது. ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் குறைகின்றது. உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற மனப்பான்மை மறைகின்றது. தொழிலாளர்கள் தொழிற்சங்க ஆட்சியில் அனுபவமும், அறிவும் பெற்று தொழில் ஆட்சியில் புகுந்துவிட்டனர். தொழில் ஆட்சியிலே நுழைந்து பொருளாதார வளர்ச்சியிலே பங்கெடுத்துச் செல்வத்தைப் பகிர்ந்து கொடுப்பதிலே பொறுப்பேற்றுக் கொண்டு இருக்கின்றனர். மக்கள் மத்தியில் சமத்துவம் சகோதரத்துவம் சமாதானம் வளர்கின்றன. மக்கள் சுகத்தோடும் சந்தோஷத்தோடும் வாழ வழிபிறந்து விட்டது. தொழிலாளர்களின் தீவிர முயற்சியால் நாட்டின் ஆட்சியும் மக்கள் ஆட்சியாக மாறுகின்றது. தொழிலாளர்களின் அடிமை வாழ்வு அழிந்து இன்று அவர்கள் இன்ப வாழ்வில் இறங்கிவிட்டனர்.

## மலையகப் பிரச்சினைகள் யாவை ?

ஆனால் மலையகத்தில் தோட்டத் தொழிலாளார் மத்தியில் ஆண்டை அடிமை காலத்து சர்வாதிகாரச் சண்டமாருதக் காற்று சுழன்று சுழன்று அடித்துக் கொண்டு சூறையாடுகிறது. தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளத்தை நிர்ணயிப்பது அரசாங்கத்தால் நியமித்த சம்பள நிர்ணய சபை. ஆனால் தொழிலாளர்களின் வருமானத்தை நிர்ணயிப்பது தோட்ட முதலாளிகள். தொழிலாளர்களின் வேலை நாளையும், வேலை நேரத்தையும் நிர்ணயித்துள்ளது சட்டம். ஆனால் வேலை நாளைக் குறைப்பதும், வேலை நேரத்தைக்கூட்டுவதும் தோட்ட முதலாளிகள். சம்பள நிர்ணய சபை இருந்தும், சட்டமிருந்தும், தொழிற் சங்கங்கள் ஏராளமாக இருந்தும் தோட்ட முதலாளிகளின் எதேச்சாதிகாரம் தலைவிரித்தாடுகிறது. தொழிலாளர்களின் போராட்டம் மூலைக் கொன்று, முடுக்குக் கொன்று. நாளைக்கு ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதத்துக்கு ஒன்று, தோட்டத்துக்கு ஒன்றும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. வெற்றிவாகை சூடப்படுகின்றது. வெற்றிக் கொடி நாட்டப்படுகின்றது. வெற்றி நாடகம் நடை பெறுகின்றது. ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் கடன்பட்டுக் கண்ணீர் விடுவதோடு பசிக்கும் பட்டினிக்கும் ,பலியாகின்றனர். பாதியிலே. வீழவும் வாலிப வயதிலே மாண்டு மடியவும் மீளாவரம் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

யும் நிறைந்த துன்பவாழ்க்கையில் துயருறுகின்றனர்.

ஜனநாயகக் கட்சிகளும், சமதர்மக் கட்சிகளும், புரட்சிக் கட்சிகளும், புத்துணர்ச்சிக் கட்சிகளும், மறு மலர்ச்சிக் கட்சிகளும், மாற்றான்கள் கட்சிகளும் மலையகத்தில் புகுந்துவிட்டன. கட்சிப் போட்டியும் போராட்டங்களும் மலையகத்தில் மலர்கின்றன, மறைகின்றன, வாடி வதங்குகின்றன. தோட்டத் தொழிலாளர் மத்தியில் பிரி

## ஒதுங்கி நிற்கிறது . . .

சம்பளத்தை உயர்த்த, வேலை நாளைக் குறைக்க, வேலை நேரத்தைக் குறைக்க எங்கும் போராட்டங்கள் தலை தூக்குகின்றன. ஆனால் மலையகத்தில் தோட்டங்களில் வேலை நாளைக் கூட்டக் கூக்குரல் போடுகின்றனர். வேலை நேரம் கூடுவதால் ''கைகாஸ்'' ''மணிக்காஸ்'' கிடைக்கிறது என்று மயங்கி

வும் பிளவும், போட்டியும் பொறாமையும், விரோதமும் குரோதமும், கோர தாண்டவமாடுகிறது. மத வேறுபாடுகளும், இன வேறுபாடுகளும் மொழி வேறுபாடுகளும் கொள்கைளும், சண்டையும் சச்சரவும் வேரூன்றி வளர்கின்றன. மலையக மக்கள் பிரிந்து பிளவுபட்டுச் சிதைந்து சின்னாபின்னப்

## உண்மையான . . .

விடுகின்றனர். ''கைகாஸ்'' கொடுக்க ''மணிக்காஸ்'' கொடுக்க ''கன்ராக்ட்காஸ்'' கொடுக்கப் பணம் தாராளமாக இருக்கின்றது. ஆனால் சம்பளத்தை உயர்த்தப் பணம் இல்லை. என்று கூறுவதைப் புரிந்து கொள்ள மறுக்கின்றனர். ஆகவே மலையக மக்கள் துன்பமும் துயரமும், கண்ணீரும் கம்பலை

பட்டுச் சீரழிந்து நிற்கின்றனர். மலையக வாழ்வு கசக்கின்றது. மலையகத்தை விட்டுத் தமிழகத்துக்கு ஓடிவிடும் எண்ணம் வளர்கின்றது.

தோட்ட முதலாளிகளின் பிரதிநிதிகளாகக் கம்பெனிக்காரர்களும் கம்பெனிக்காரர்களின் அதிகாரிகளான தோட்டத் தொழில்களில் தலைமை தாங்கும் துரைமார்கள் தாங்கள்

என்ன செய்கிறோம் என்பது அவர்கட்கே தெரியாது. உற்பத்திச் செலவைக் குறைப்பதும் இலாபத்தை அதிகரித்துக் காட்டுவதும் அவர்களின் கடமை. உற்பத்திச் செலவைக் குறைக்கத் தொழிலாளரின் வருமானத்தைக் குறைப்பதே அவர்களின் தொழிலாகக் கொண்டுவிட்டார்கள். இலாபத்தை அதிகரிக்க, வேலை நேரத்தைக் கூட்டுவதே அவர்களின் நோக்கமாகி விட்டது. வருமானத்தைக் குறைத்து வேலை நேரத்தை அதிகரித்து, வேலை அளவைக் கூட்டி தொழிலாளர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். உற்பத்திச் செலவைக் குறைத்து இலாபத்தை அதிகரிக்கத் தொழிலாளர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். தோட்டத் தண்டனைகளெல்லாம் தொழி

யில்லை. திமிர் பேசியதால் வேலையில்லை. திரும்பிப் போனதால் வேலையில்லை. தொழிலாளர்களைத் தூண்டி விடுவதால் வேலையில்லை. தொழிலாளர்களைக் கெடுப்பதால் வேலையில்லை. சிரித்தால் வேலையில்லை. சீட்டியடித்ததால் வேலையில்லை. நிமிர்ந்து நின்றால் வேலையில்லை. நீட்டிப் பேசியதால் வேலையில்லை. குறை சொன்னதால் வேலையில்லை. குற்றம் சாட்டியதால் வேலையில்லை. கும்மாளம் போட்டதால் வேலை இல்லை. வேலையில்லை வேலையில்லை என்ற வேடிக்கையான தண்டனைகள் தோட்டங்களில் தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றன. வேலை இல்லாவிட்டால் வீட்டில். இருக்க வேண்டியதுதானே வீண் வம்பு எதற்கு என்று எளி

## ஊதியப் பிரச்சினை.

லாளர்களை அடி வயிற்றில் அடிக்கும் தண்டனைகளாகவே அமைந்து விட்டன.

வேலைக்குச் சுணங்கி வந்தால் வேலையில்லை. வேலைக் கணக்குக் குறைந்தால் வேலையில்லை. வேலையில் குற்றம் செய்தால் வேலையில்லை. வேலை நேரத்தில் கதைத்தால் வேலையில்லை. வேலைச் சமயத்தில் பீடி குடித்தால்வேலையில்லை. வேலை செய்யாமல் உட்கார்ந்து இருந்தால் வேலையில்லை. வேலை இடத்தை விட்டு வேறு இடத்திற்குப் போனதால் வேலையில்லை. எதிர்த்துப் பேசியதால் வேலையில்லை. அதிகாரியோடு அதிகம் பேசியதால் வேலையில்லை. சட்டம் பேசியதால் வேலையில்லை. சண்டை போட்டதால் வேலை

தாகக் கூறலாம். ஆனால் வேலை இல்லாவிட்டால் வேதனமில்லை. வேலை இல்லாவிட்டால் சம்பளமும்மில்லை சாப்பாடுமில்லை. பசிக்கும் பட்டினிக்கும் பலியாக வேண்டும். தேயிலை விலை வீழ்ச்சியால், நாணய மதிப்பு குறைப்பின் காரணமாகப் பஞ்சப்படி 30சதம் கூடியதால் ஆண்களுக்கு அநேகமாக வேலை நாள் குறைந்து விட்டது. வயது வந்த பிள்ளைகட்கு வேலையில்லாத் திண்டாட்டம். வேலை கொடுக்கும் அந்த நாட்களில் வேலைக்குப் போனால் நொண்டிக் காரணம் காட்டி வேலையில்லை என்ற தண்டனை. வேதனை மலை, மலையாகக் குவிகின்றது. தண்டனையால் வாரத்துக்குச் சில நாட்களும், சில சமயங்களில் வாரக் கணக்கிலும் வேலையில்லாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலிருக்க வேண்டும். பெண்களுக்கு வாரத்திற்கு 7 நாள் வேலை. ஒரு நாளைக்குப் பத்து மணி நேரம் வேலை. பெண்களுக்கு அதிக வேலை நாளும், அதிக வேலை நேரமும் கொடுப்பதாலும், அவர்களின் உடலமைப்பின் காரணமாகவும், இயற்கையின் காரணமாகவும் அவர்கள் வேலைக்குப் போகும் நாட்களும் குறைந்து விடுகின்றன. ஆண்கள் குறைந்த நாட்கள் வேலை செய்வதாலும், பெண்கள் இவற்கையாகக் குறைந்த நாள் வேலையில்லாமல் இருப்பதாலும், பிள்ளைகள் வேலையில்லாமல் இருப்பதாலும் குடும்ப வருமானக் குறைவினால் கடன்படுகின்றார்கள். கடன் கொடுத்தவர்கட்கு வட்டி நேர்முகமாகவும், மறைமுகமாகவும், கட்டியே தீர வேண்டும். குறைந்த வருமானமும், கடன் தொல்லையும் தொழிலாளர்களை வாட்டி வதைக்கின்றது.

முன்பெல்லாம் தோட்டத் தொழிலாளர்கட்குச் சட்டப்படி அரிசி 28 கொத்தும், பெண்ணுக்கு 24 கொத்தும், பிள்ளைக்கு 20 கொத்தும் மாதா மாதம் குறைந்த விலையிலே கிடைத்து வந்தது. இன்று தலைக்கு வாரத்திற்கு 1 கொத்து அரிசி இனமாகக் கிடைக்கின்றது. வெளியிலே வாங்கும் ஒரு கொத்து அரிசிக்கு குறைந்தது 1/75 சதம் கொடுக்கவேண்டும். அன்று ஆணுக்கும் பெண்ணுக்கும், பிள்ளைக்கும் 26 நாள் வேலையும், சம்பளமும் கிடைத்தது. இன்று தொழிலாளர்களின் வருமானம் குறைந்து விட்டபடியால் அரிசிக்குப் பதிலாக கோதுமை மா வாங்குகின்றனர். அன்று நாளைக்கு மூன்று வேளை அரிசிச் சாதம் சமைத்து சாப்பிட்டனர். இன்றோ நாளைக்கு ஒரு வேளை அரிசிச் சாதம், இரு வேளை கோதுமை ரொட்டி சாப்பிடுகின்றனர். ஆகவே தோட்டத் தொழிலாளர்களின் வருமானம் குறைந்ததோடு உணவும் குறைந்து விட்டது. மாவும் அடிக்கடி பதுங்கிக் கொள்கின்றது. சாமான்களின் விலையும் சந்திர மண்டலத்தை எட்டிப் பிடிக்கின்றன.

வருமானம் குறைந்து வாடுவதோடு உணவு குறைந்து வதங்கும் தொழிலாளி வேலைக்குப் போனால் வேலையில்லை என்ற தயவு தாட்சண்ய மற்ற தண்டனை தொழிலாளர்களின் ஆத்திரத்தை மூட்டுகின்றது. உணர்ச்சி வசப்பட்ட தொழிலாளி தன் ஆவேசத்தைக் காட்டுகின்றான். கண்ணை மூடிக் கத்துகிறான். பிரச்சினையும் கிளம்பி விடுகின்றது. கண்டவர்களும் காணாதவர்களும் கேட்டவர்களும் கேட்காதவர்களும் வேலையை நிறுத்தி வீட்டுக்கு வந்து விடுகின்றனர். வேலை நிறுத்தம் ஆரம்பித்து விடுகிறது. ஆத்திரத்தில் ஆவேசத்தில் ஆழ்ந்த தொழிலாளர்களைத் தூண்டி விட்டு ஏதாவது லாபம் தேடத் துரியோதனன் கூட்டம் துடி துடித்துக் கொண்டு நிற்கின்றது. கல் வீச்சும், அடிதடியும் தொழிலாளர் மத்தியிலும், அதிகாரிகளோடும், அடுத்தவர்களோடும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு திசை திருப்பப் படுகின்றன. கடைசியில் தொழிலாளர்களே குற்றவாளிகள் என்று தண்டிக்கப்படுகின்றனர்.

தோட்டத்திலே குழப்பம், தொழிலாளர் மத்தியிலே அடிதடி, அதிகாரிகள் காயப்படுத்தப்பட்டனர் என்ற கதைகள் எங்கும் பரவுகின்றன. தொழிலாளர்களைச் சுரண்டி வாழும் சுண்டெலிக் கூட்டமும் சுயநலப் புலிகளும் தொழிலாளர்கட்காக முதலைக் கண்ணீர் விடுகின்றனர் வருமானக் குறைவால் வளர்ந்த பிரச்சினை, உணவுக் குறைவால் உயர்ந்த பிரச்சினை என்பதைத் தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும், அரசாங்கமும் அறிந்து கொள்வதுமில்லை தெரிந்து கொள்வதுமில்லை. தொழிலாளர்களைக் குறை கூறிக் குற்றம் சாட்டும் கூட்டமும் முதலாளிகளின் அதிகாரிகளைக் குற்றம் சாட்டும் கூட்டமும் குசு குசுக் கூட்டங்கள் நடத்துகின்றன. அதிகாரிகளை அப்புறப்படுத்த வேலை நிறுத்தம் நீடிக்கப்படுகிறது. குற்றத்தை யார் மேலாவது சுமத்திவிட்டு வேலை நிறுத்தம் வாபஸ்பெறப் படுகின்றது. தொழிலாளர்களின் கஷ்டமும், நஷ்டமும் ஓங்கி வளர்கின்றது. உண்மையான ஊதியப் பிரச்சினை ஒதுங்கி நிற்கின்றது. தொழிலாளர்களின் குறைந்த வருமானமும் குறைத்த உணவும் ஒரு பூதம் போல் கிளம்பி விட்டது. இப்பிரச்சினை தோட்டத் தொழிலாளர்களின் ஒன்றுபட்ட பிரச்சினை இந்த ஒன்றுபட்ட பிரச்சினையைத் தீர்க்கத் தோட்டத் தொழிலாளர்களின் ஒன்றுபட்ட போராட்டம் அவசியம். வருமானக் குறைவும் உணவுக் குறைவும் ஒரு மக்கள் பிரச்சினை. ஆண்டவன் தீர்க்க வேண்டிய பிரச்சினையல்ல. அரசாங்கம் தீர்த்து வைக்கும் என்று எண்ணுவதும் தவறு முதலாளிகள் தீர்த்து வைப்பார்கள் என்று கருதுவதும் தப்பு. தோட்டத் தொழிலாளர்களின் ஏகோபித்த முயற்சியே இப்பிரச்சினையைத் தீர்க்கும் ஆயுதம். தொழிலாளர்கள் கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் தயா தயாராக வேண்டும். தொழிலாளர்களின் ஒற்றுமையால், தியாகத்தால், வீரத்தால் வருமானப் பிரச்சினையும் உணவுப் பிரச்சினையும் தீர்ந்துவிடும். தோட்டப் பிரச்சினையும் குழப்பமும் ஒழிந்து விடும். தொழிலாளி, முதலாளி உறவும் உயர்ந்து விடும். தொழிலாளர் வாழச் சம்பளம் உயர வேண்டும். தோட்டப் பிரச்சினைகள் ஒழியத் தொழிலாளர் சம்பளம் உயர வேண்டும்.



## உண்மையே வெற்றி கொடுக்கும்

— மனுப்போடும்போது உண்மையையே பேசுங்கள் ஒரு பொய்யையும் சேர்க்காதீர்கள். ஒரு பொய் ஆயிரம் உண்மைச் செய்திகளையும் பாழாக்கி விடும். ஆகவே நீங்கள் உண்மையையே பேசுங்கள் உண்மையைச் சொல்லி கெட்டகுடி உலகத்தில் இல்லை சில சமயங்களில் உண்மை பேசுவதாசிரமம் ஏற்பட இடம் உண்டு அச்சிரமத்தை கவனித்து பொய் சொல்லாதீர் ! பொய்யைச் சொல்லி வெற்றி பெறுவதை விட உண்மையைச் சொல்லி தோல்வி அடைவது மேல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “புதிய சக்தியின் உதயம்”

## ( ஐ. எல். ஓ )

அவ்வப்போது நடக்கும் முயற்சிகளை தொழிற் சங்கங்கள் கவனித்து வந்தன என்றுலும், அவற்றிஞல் ஏதாவது பயன் கிடைக்குமா என்ற சந்தேகமும் இருந்தது. இயந்திர உற்பத்தியின் கொடுமைகளிலிருந்து தங்களைப் பாதுகாப்பதற்கு முயற்சித்தால் மட்டும் போதாது; அம் முறையையே மாற்றியமைக்க (சீர்திருத்துவதற்கு அல்ல) வேண்டுமென்று அச் சங்கங்கள் கருதின. சிலர் இரக்கத்தையும், மனிதாபிமானத்தையும் விட சமூக நீதி வழங்குவதே அவசியமென்று நினைத்தனர். ஒப்பந்தங்கள் சரியாக செயலாக்கப் படுகின்றனவா வென்ற கண்டிப்பான கண்காணிப்பு இருக்க வேண்டுமென்று கூறினர். இப்பிரசிச்னைகளில் நேரடியாக சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் அதாவது முதலாளிகளும், தொழிலாளரும், இதைப் போன்ற நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுமாறு செய்தால்தான் நிரந்தரமாகவும் உபயோகமான முறையிலும் அவற்றைத் தீர்க்க முடியும் என்று பலர் கருதினர்.

போரும், அதற்குப் பிறகு ஏற்பட்ட நிலையும் இக் கருத்துக்களுக்கு திட்டவட்டமான உருவமளித்தன. போர் முடிந்த பிறகு, சமாதானக் கூட்டம் நடக்கும் அதே இடத்தில், அதே சமயத்தில் உலகத் தொழிலாளர் மாநாடும் கூட்ட வேண்டுமென்று அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனம் அதன் தலைவர் சாமுவேல் கோம்பர்சின் ஆலோசனைக்கிணங்க 1914ஆம் ஆண்டிலேயே கூறுயிருந்தது. பிரஞ்சு தொழில் சங்கத் தலைவர் லியான் ஜோஹோ, போர் முடிவில் கையெழுத்தாகும். அமைதி உடன் படிக்கையில், தொழிலாளர் நலச் சட்டங்கள் பற்றிய பகுதியும் முக்கிய இடம் பெற வேண்டுமென்று கூறிஞர். பெர்ன் ஒப்பந்தங்கள் வெற்றி பெற்றதைப் போல் அமைதி உடன்படிக்கையில் சேர்க்கப்படும் திட்டங்களும் வெற்றி பெறும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். நேச நாட்டுத் தொழிற் சங்க பிரதிநிதிகள் கூட்டம் 1916 ல் லீட்ஸ் நகரில் கூடியபோது, பிரஞ்சுத் தலைவரின் யோசனையை எல்லோரும் ஏற்றனர். மற்ற நாடுகளின் தொழிலாளர் தலைவர்களும் 1917ல் ஏறக்குறைய இதே முடிவுக்கு வந்தனர். இப்படியாக எல்லோரும் இக் கருத்தை விரும்பினர்.

போர்கள் தலையெடுப்பதற்கு, ஒருவரை யொருவர் விழுங்க முயலும் கடும் போட்டியே பெரும் பொறுப்பு வகிக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. தத்தம் நாட்டுப் போர் முயற்சிகளில் பங்கெடுத்துக் கொண்டதால், அமைதியின் நற்பயனையும் அனுபவிக்கத் தங்களுக்கும் உரிமையுண்டு என்று தொழிலாளர் ஆவலுற்றிருந்தனர். சமூக நீதியைப் புறக்கணிப்பது படு நாசத்தில் சென்று முடியும். போருக்குப் பின் எழுந்த புரட்சிகளையும் சமூகக் கொந்தளிப்புகளையும் பார்த்த முட்டாள்கள் கூட இதை அறிந்து கொண்டிருப்பார்கள்.

எனவே அமைதி உடன் படிக்கை தயாரித்த நாடுகள், சர்வதேச சங்கத்தைத் துவக்க முடிவு செய்ததுடன், உலகில் தொழிலாளர் அனைவரையும் பாதுகாக்கவும், அவர்களது நிலையை உயர்த்தவும் நிறுவனமொன்றை உருவாக்குவது என்றும் தீர்மானித்தனர். சர்வதேசத் தொழிலாளர் நிறுவனம் இப்படியாக 1919ல் பிறந்தது.

அமைதி உடன் படிக்கையில் தொழிலாளர் பிரச்னை பற்றிய பகுதியொன்று தனியாக இருந்தது. சமூக நீதியின் அடிப்படையில் தான் உண்மையான அமைதி தோன்றும். உழைப்பு என்பது வாங்கி விற்கும் சரக்கு அல்ல. இன்றுள்ள நிலையில் அநீதி, வறுமை, வேலைக் கஷ்டம் ஆகியவற்றில் தொழிலாளர் உழல வேண்டியிருக்கிறது. உலக அமைதிக்கும் நல்வாழ்வுக்கும் இதஞல் ஆபத்து. தொழிலாளர் வேலை நிலையில் உடனடியாக முன்னேற்றம் ஏற்பட வேண்டும். முதலாளி, தொழிலாளி, அரசாங்கம் ஆகிய முத்தரப்புப் பிரதிநிதிகளும் ஒன்றுபட்டு இயங்கும் சர்வதேச நிறுவனம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அதில் சேரும் உறுப்பு நாடுகள் எல்லாம் அதன் தீர்மானத்தைச் செயல் படுத்த வேண்டும். இவை அப்பகுதியில் கூறப்பட்டிருந்தன.

சர்வதேசத் தொழிலாளர் நிறுவனம் -ஐ. எல் ஓ- தோன்றி 50 ஆண்டுகளாகி விட்டன.



இந்த அரை நூற்றுண்டில் எத்தனையோ புதுப் பிரச்னைகளை அது சமாளிக்க வேண்டியிருந்தது. 1919 ல் இருந்த நிலைவேறு கடந்த 25 ஆண்டுகளில் பல நாடுகள் அரசியல் விடுதலை பெற்றிருக்கின்றன. இவற்றின் பொருளாதார, சமூக வளர்ச்சி மிக முக்கியமானதாக இருக்கிறது. தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கும், முன்னேறி வரும் நாடுகளுக்கு மிடையே வாழ்க்கைத் தரத்தில் வேறுபாடுகள் இருக்கின்றன. இவற்றைப் போக்கத் தேவையான பொருள்களைத் திரட்ட வேண்டும். புதிய முறைகளில் விரைவாக உயர்வு தாழ்வுகளை அகற்ற முயல வேண்டும். விஞ்ஞான முன்னேற்றமும், பொருளாதார, சமூக மாறுதல்களும், இதுவரையில்லாத புதிய பிரச்னைகளைத் தோற்றுவித்திருக்கின்றன. ஜனப் பெருக்கம் அபரிமிதமாகி வருகிறது. இவற்றிக்கு ஒருவழி காணவேண்டும். உலகத்தின் பல்வேறு பகுதிகள் சுயமாகத் தொடர்பு கொள்ள இப்போது வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஏதே ஓரிடத்தில் நிலவும் ஏழ்மை மற்ற எல்லா இடங்களிலுமுள்ள சுபிட்சத்துக்குப் பேராபத்து என்ற வார்த்தைகள் முன்னெப் போதையும் விட இன்றைய நிலையை நன்ருக எடுத்துக் காட்டுகின்றன. இந்த ஆபத்தைக் தடுக்க உலகத் தொழிலாளர் நிறுவனம் எப்படித் தகுதி பெற்றிருக்கிறது? இன்றைய உலகில் இது சமூக முன்னேற்றத்திற்கு எப்படி உதவுகிறது? இப்பிரச்சனைகளுக்கு, அடுத்து வரும் பகுதிகளில் இந்நூல் விடையளிக்கிறது.

(1ம் பாகம் முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமருக்கு நமது வேண்டுகோள்

1974ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 1ம் திகதியில் இருந்து தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தில் 10% கூட்டிக் கொடுப்பதற்கு உங்கள் சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கையை நாங்கள் வரவேற்கிறோம். உணவு, பொருள் குறைபாட்டாலும், அவைகளின் விலை வாசிகள் அளவுக்கு மிஞ்சிக் கூடியதாலும் தொழிலாளர்கள் படும் தாங்க முடியாத அவஸ்தையை தீர்க்கு முகமாக இந்த நடவடிக்கையை நீங்கள் எடுத்திருக்கின்றீர்கள் என்று கருதுகின்றோம். ஆனால், இதனால் ஏற்படும் பலன் தொழிலாளிக்குப் போய்ச் சேராத படி முதலாளிமார்கள் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப் படும் வேலை நாட்களைக் குறைத்து விடுவார்கள்.

தோட்டத் தொழிலாளர்களுடைய அந்தஸ்து தற்காலிக (அத்தக் கூலி) தொழிலாளியின் நிலைமையாக மாறிக் கொண்டு வந்து விட்டது சட்டப் பிரகாரம் வாரத்தில் 6 நாள் வேலை கொடுக்க வேண்டி இருந்தும் கடந்த சில காலமாக அவனுக்கு வாரத்தில் 3-4 நாட்களுக்கு வேலை குறைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்த சட்டத்தை அமுல் நடத்துவதற்கோ அல்லது 26 நாள் வேலையை அடிப்படையாக வைத்து தொழிலாளிக்கு சம்பளம் கிடைப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கவில்லை.

1972 செப்டம்பரில் 18-12 சதம் தொழிலாளியின் சம்பளத்தில் கூட்டியதின் நன்மையையும் 1973 ஒக்டோபர் சம்பளத்தில் 10% கூட்டியதின் நன்மையும் முதலாளிமாரின் வேலை நாட்களைக் குறைத்து முறியடித்து விட்டார்கள். அதைப் போலவே இப்போது கொடுக்கப் போக இருக்கும் 10% உயர்வையும் முதலாளிமார்கள் முறியடித்து விடுவார்கள் என்பதில் எங்களுக்கு சந்தேகமில்லை. இப்பொழுது பசி பட்டினியில் உழன்று கொண்டிருக்கும் தொழிலாளிக்கு யதார்த்தமாகவே உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணமிருந்தால் கிழமையில் 6 நாள் வேலை கொடுப்பதற்கு நிச்சயப்படுத்த வேண்டும். அதன் மூலமாக மாத்திரமே இந்த 10% சம்பள உயர்வால் பயன் அடைய முடியும் எனவே தோட்ட தொழிலாளர்களுக்கு கிழமையில் 6 நாள் வேலையும், மாதத்தில் 26 நாள் வேலையும் கொடுப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்க உங்கள் சர்க்காரை வேண்டுகின்றோம். எந்தத் தோட்டமாவது வாரத்திற்கு 6 நாள் வேலை கொடுப்பதற்கு தவறினால் அந்த தோட்டத்தை சர்க்கார் சுவீகரித்து, சர்க்கார் தோட்ட கூட்டுத்தாபனத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்த நடவடிக்கையின் மூலம் தொழிலாளி விமோசனம் அடைவதோடு, நாட்டில் தேயிலை உற்பத்தியும் பெருகும்.

இங்ஙனம்.
தொழிலாளர் தேசிய சங்கம்.
சோசலிச சுதந்திர தோட்ட தொழிலாளர் காங்கிரஸ்.
லங்கா தோட்ட தொழிலாளர் சங்கம்.
இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கம். (செங்கொடி)



## அன்று தொழிலாளிக்குச் செய்த துரோகத்தை, யாராலும் எக்காலத்திலும் மன்னிக்க முடியாது! இன்று அவன் முதுகின் மேல் ஏறி கொடி பிடிப்பதா?

— தலைவர். டி. அய்யாத்துரை —

1955 - முதல் 1967 வரை உள்ள 12 வருடங்களில் தோட்டத் தொழிலாளர்களது சம்பளம் கூட்டப்படவில்லை. சம்பள நிர்ணய சபைக்கு முன், சம்பள உயர்வுக்காக கொண்டு வரப் பட்ட பல முயற்ச்சிகள் தோல்வியடைந்தன. இதற்குக் காரணம் அச்சபையின் அமைப்பேயாகும்

தொழில் சங்கங்களும் முதலாளிமார் சங்கங்களும் சம பிரதிநித்துவமும், நியமன அங்கத்தவர்களில் மூவர் இவர்களோடு சேர்க்கப்படுவது முறை. முடிவு செய்வதற்கு வாக் கெடுக்கும் போது, நியமன அங்கத்தவர்கள் அநேகமாக முதலாளிகளோடு சேர்ந்து வாக்களிப்பது வழக்கமாக இருந்தது

இக்காலப் பகுதியில் ஜனநாயக தொழிலாள காங்கிரஸ் 17 - 50 ஐ பஞ்சப்படியாக கொடுக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்தது இக்கிளர்ச்சிக்கு எதிராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நாட் சம்பளத்தில் ஒரு ரூபாய் கூட்ட வேண்டுமென்று கொக்கரித்தது.

ஆனால் 1967ல் இலங்கை தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தோடு செய்து கொண்ட முதல் கூட்டு ஒப்பந்தத்தில் ஒரு ரூபாய்க்குப் பதிலாக பத்து சதம் மாத்திரமே கிடைத்தது. ஏனைய தொழில் சங்கங்கள், சம்பளப் பிரச்னையை, மறுபடி எடுக்காது தடை செய்யவே இந்த 10 சத உயர்வை சம்பள நிர்ணய சபையில் ஊர்ஜிதம் செய்ய, இ. தொ. கா.வும் துரைமார் சம்மேளனமும் சேர்ந்து முடிவு செய்து வந்தனர்.

அப்போது சம்பள நிர்ணய சபையின் நியமன அங்கத்தவர்கள் 25 சதம் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்தனர். இதை எதிர்த்து இ. தொ. கா வாக்களித்தது. இது எல்லோருக்கும் தெரிந்த விசயம் எனவே 1967ல் தொழிலாளிக்கு 10 சதம் மாத்திரம் சம்பளத்தில் கூட்டப் பட்டது. இதே சமயத்தில் நாணய விலை மதிப்பின் குறைவால் ஏற்பட்ட கஸ்டத்தை சமாளிக்க தோட்டத் தொழிலாளர்களுக்கு 30 சதம் கொடுக்கப்பட்டது.

இவைகள் இரண்டும் நாள் வருவாயாக அமைக்கப்பட்டவை. இதன் பலன் தொழிலாளர்களுக்குச் சேரவில்லை. தோட்ட முதலாளிமார்கள் உடன் தங்கள் விவசாயமுறையை மாற்றியதன் காரணமாக பல வேலைகளை நிறுத்திவிட்டார்கள். உதாரணமாக கானு வெட்டுதல், முள்ளு குத்துதல், பவுண்டரி வெட்டுதல் அருகு எடுத்தல் போன்றவகைகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடலாம். எனவே வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாள் மாத்திரமே வேலை கிடைத்தது. ஆனால் முன்னைவிட சம்பளம் குறைந்துவிட்டது.

வாரத்தில் 6 நாள் வேலையும், மாதத்தில் 26 நாள் வேலையும் கொடுக்க வேண்டுமென்று சட்டமிருந்தும் முதலாளிமார்களின் கெடுபிடியை யூ.என்பி. அரசும், பெரிய தொழில் சங்கங்களும் கண்டிக்காது கண்ணை மூடிக் கொண்டு இருந்தனர்.

இதன் காரணமாக கடந்த பல ஆண்டுகளாக தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆறு நாள் வேலை கொடுக்க வேண்டுமென்று தொழில் சங்கங்கள் பெரும் கிளர்ச்சி செய்து வந்துள்ளன.

எனினும் தொழிலாளரின் கஸ்ட நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வந்தது. கூட்டு முன்னணி அரசுக்கு வந்ததும் நமது சங்கம் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்க வேண்டும். 8மணி நேர வேலையை 6 மணியாக குறைக்க வேண்டும் என்று தன் மகஜரில் தொழில் சட்ட விசாரணைக் கமிசனுக்கு சமர்ப்பித்தது. அதற்குப் பின்னால் ஏனைய தொழில் சங்கங்களும் மாதச் சம்பளத்தின் முக்கியத்துவத்தை தெரிந்து கூட்டாகவும், தனியாகவும் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தன.

கடந்த மூன்று வருடங்களில் இவ்வரசு மூன்று முறை சம்பள உயர்வு அளித்துள்ளது. 1972 ல் ஆண் தொழிலாளிக்கு 18 சதமும், பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் 12 சதமும் சம்பள உயர்வு செய்தது. அதற்குப்பின்1973 ஒக்டோபரில் சம்பளத்தில் 10% கூட்டியது, மாத கடைசியாக அன்மையில் மார்ச் சம்பளத்தில் 10% உயர்வு கொடுத்தார்கள்.

இப்படி சம்பளம் கூடிய தன் காரணம் 26 நாள் வேலை கிடைத்தால் மாதத்தில் 124-80 சதம் கிடைக்க வேண்டும். அப்படிக் கிடைத்தால் தோட்ட மக்களிடையே தோன்றியுள்ள வறுமை - பசி - பட்டினி நீங்கி வாழ வழிதோன்றும். இதை மனதில் கொண்டு பிரதமர் அவர்களுக்கு, நமது சங்கமும், நம்மோடு தோழமை கொண்ட முற்போக்கு தொழில் சங்கங்களும் கிழமையில் 6 நாள் வேலையும், மாதத்தில் 26 நாள் வேலையும் கொடுத்தால் மாத்திரமே, இந்த சம்பள உயர்வால் தொழிலாளர்கள் பயணடைவார்கள். மாதச் சம்பளபிரச்சினை முடிவதற்கு முன் 26 நாள் வேலை கொடுப்பது ஒரு பெறும் நிவாரண மாகவும், தொழிலாளர்கள் உயிர் வாழ்வதற்கு நல்ல வழியுண்டு என்றும் வற்புறுத்தியுள்ளோம்.

அன்று 1967ல், இருபத்தி ஐந்து சத சம்பள உயர்வுக்கு வேட்டுவைத்து, தொழிலாளி வாயில் மண்ணையும். வயிற்றில் தீயையும் இட்ட இந்த பிற்போக்கு தொழில் சங்கம் இன்று நீலிக்கண்ணீர் விட்டுக் கொண்டு "தொழிலாளத் தோழனே நீ என் வாலைப் பிடித்துக் கொண்டு வா உன் துயர் துடைப்பவன் நானே" என்று அழைப்பது தொழில் சங்க கடந்தகாலச் சரித்திரத்தை அறிந்தவர்களுக்கு ஒரு பெரிய விந்தையக்கத் தோன்றுகின்றது.



அன்று தொழிலாளிக்குச் செய்த துரோகத்தை, அநீதியை யாராலும், எக்காலத்திலும் மன்னிக்க முடியாது. யூ-என்- பி. ஆட்சி நிழலில் இவர்கள் வாழ்ந்த காலத்தில் தொழிலாளி உயர்வுக்கு எதிர் ஓட்டு! இன்று சம்பள உயர்வுக்குப் போராட்டம்! இதன் மர்மம் என்ன? தொழிலாளியைத் தேடி வருவதின் நோக்கம்தான் என்ன? ஐக்கிய முன்னனி ஆட்சிக்கு வந்தது. நில உச்சவரம்புச் சட்டத்தை அமுலாக்கியது. இச் சட்டத்தால் சில பணம் படைத்த தலைவர்களின் பெரு நிலங்கள் பறிபோயிற்று. நில இழப்பால் தங்கள் வருவாய் குறைந்து, மதிப்பிழந்த தலைவர்கள் சினங் கொண்டு தாம் இழந்த நிலையை மீண்டும் கைப்பற்ற பசுத்தோலை போர்த்திக் கொண்டு, சம்பளப் போராட்டம் என்ற போர்வையில் சட்ட மறுப்புப் போராட்டம் நடத்துவதற்கு ஆயத்த மாகிவிட்டார்கள். இவர்களின் இலாபத்திற்கு நடக்கும் இப்போரில் தொழிலாளியை பலியிட்டு, அவனின் முதுகின்மேல் ஏறி கொடிபிடிக்க வேண்டும் என்பதுதான் இந்த ஏமாற்றும் தலைவர்களின் குறிக்கோளும், சாணக்கிய தந்திரமுமாகும். எனவே தொழிலாளர்கள் தெளிந்த நோக்கோடும். விழிப்போடும் இருத்தல் வேண்டும். இவர்கள் நடத்தும் இம்மாயா ஜாலப் போராட்டத்தில் களந்து கொள்வதில்லை என எச்சரித்தோம்.

இவர்களின் சூழ்ச்சிகளையும், தந்திரங்களையும் நன்கு அவதானித்த பின்பே நமது சங்கம் இவர்கள் நடத்தும் போராட்டத்தில் களந்து கொள்ள வில்லை என்பதை பகிரங்கமாக கூறிக் கொள்கின்றோம்.

---

## கொடியும் கொழு கொம்பும்

— கடமையும் உரிமையும், கொடியும் கொழு கொம்பும் போல, கடமையின்றி உரிமையில்லை. உரிமையோடு ஒட்டி இருப்பதுதான் கடமை. கடமை அஸ்திவாரம், உரிமை அதண் மீது எழும்புகிற கட்டிடம். கடமையைச் செய்யாமல் உரிமையை மட்டும் அனுபவிக்க விரும்புகிறவன் போஷணைப் பொறுப்பை ஏற்க மறுத்து விட்டு, அதன்பாலை மட்டும் கறந்து சாப்பிட விரும்புகிறவன் மாதிரிதான்.

— ராஜாஜி —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிலாளர் தேசிய சங்க அங்கத்தவர்களுக்கு

நமது ஸ்தாபனத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தை 1965 ம் ஆண்டு மே மாதம் 1 ம் திகதி அட்டனில் நடத்தினேம். அதற்குப் பின், வருடா் வருடம் நமது மாநாட்டை நடத்தி அம் மாநாடுகளிலே நமது தளராத உறுதியை ஸ்திரப்படுத்தி, படிப்படியாக முன்னேறி வளர்ந்து வந்துள்ளோம். ஒன்பது வருட காலத்தில் ஒரு சில மாவட்டக் கமிட்டிகளோடு துவங்கி, இப்போது 21 மாவட்டக் கமிட்டிகளேயும் 5 மானில அலுவலகங்களேயும், தலைமைச் செயலகத்தில் தொழில் உறவுப் பகுதி, சட்ட இலாகா, நிதி இலாகா; நிர்வாக இலகா, ஆகியவற்றைச் செயல் படுத்துவதுடன் நமது கொள்கைகளே விளக்குவதற்கு ஒரு மாதசஞ்சிகையும் வெளியிடுகின்ருேம். இவ்வளவு குறுகிய காலத்திற்குள் பரந்த நிலையிலுள்ள ஒரே ஸ்தாபனம் நமது சங்கம் என்ருல் அது மிகையாகாது. இதைக்காண நாம் ஒவ்வொருவரும் பெருமையும், பூரிப்பும் கொள்வதுடன் புதியதென்பும் திடமான எண்ணமும், நம்பிக்கையும் தோன்றுகின்றது.

இதன் தலைமைச் செயலகம், கொழும்பு 3, 618 3/3 காலி வீதியிலும் (தபால் பெட்டி நிர்-13) செயல்படுகின்றது. நாம் வளர்சியடைந்திருக்கும் இந்த நிலையில் நமது ஸ்தாபனத்தைக்கண்டு பணம் படைத்த முதலாளி வர்க்கம். தொழில் சங்கப் போர்வையில் மறைந்து கொண்டு கைக் கூலிகளே ஏவி பல வழிகளிலும் நமது முன்னேற்றத்தை தடுக்கிருர்கள்.

எங்களே எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. எங்கள் ஸ்தாபனம் சகல நிர்வாகங்களேயும் தொழிலாளர்களேக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றது. பொது மக்களின் மத்தியிலே எழுச்சியையும், புத்துணர்ச்சியையும் உண்டாக்கி விழிப்படையச் செய்ய வேண்டும். உங்களின் பூரண ஒத்துழைப்புடன் நமது ஸ்தாபணத்தின் ஒளி பிரகாசிக்கச் செய்யும் பணியில் நாம் வெற்றி பெருவோமென திடமாக நம்புகிருேம்.

— கே. வீ. வெள்ளசாமி. —
நிதிச் செயலாளர்

அட்டைப்

படம்



நாகரீக வாழ்க்கை நடக்கும் நகரத்தில், நாரீமணிகளே கான் கண்டதில்லை தோட்டக்காட்டில் அழகிய அணங்குகள் இருக்கின்ருர்கள். இவர்கள் கரங்கள் காமதேனுவுக்கு ஒப்பாகும்.

நாட்டின் நலன்களே அயராது கண்காணிக்கும் இனத்தை சேர்ந்த பெண்மணியின் உருவத்தை அனுப்பியுள்ளேன்.

வெய்யிலிலும், வேணலிலும், மழையிலும் காலே ஏழரை மணிமுதல் மாலே ஆறு மணிவரை கொழுந்து பறிக்கும், இப்பெண் முக்காடு இட்டு தேயிலைச் செடிகளுக்கு மத்தியில் எதிர்காலம் எப்படியோ என்று சிந்திப்பதை நீங்கள் காணுவீர்கள்.

த. நடராஜா.
கிளன்பார்க் குருப்,
கட்டுகுத்தாலே.

குறிப்பு: —

சித்திரப் போட்டியில் வெற்றிகண்ட
த. நடராஜா அவர்களே
பாராட்டுகின்ருேம்.
— ஆசிரியர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கச் செய்தி

எல். ஸ்ரீகாந்தன்

## தபால் பெட்டி எண் 13

இம்மாதம், முதல் எமது சங்க தலைமை நிலையத்துடன் கடிதத் தொடர்பு கொள்ளும் அனைவரும் எமது பழைய முகவரியுடன் "தபால் பெட்டி எண் 13" என்பதையும் சேர்த்துக் கொள்ளவும்.

## மானிலச் செயலாளர்களின் கூட்டம்

6-4-1974 ல் எமது தலைமைக் காரியாலயத்தில் மானிலச் செயலாளர்களின் கூட்டம் நடைபெற்றது தலைவர் டி. அய்யாத்துரை அவர்களின் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் திரு. ஸி. வி. வேலுப்பிள்ளை, பொதுச் செயலாளர் திரு. பி. வி. கந்தையா, நிதிச் செயலாளர் திரு. கே. வி. வெள்ளச்சாமி ஆகியோரும்; மானிலச் செயலாளர்கள் திருவாளர்கள் ஜே. எம். செபஸ்தியான், எஸ் பி. ரெட்டியார், எஸ். ஓ இரத்தினராஜா, எம். எஸ். துரைச்சாமி ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

நல்ல பலனைப் பெற வேண்டுமாயின் முறையாக நமது அலுவலகங்களுக்குச் சென்று முறைப்பாட்டு புத்தகம், கடிதப் போக்குவரத்துக்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ய வேண்டுமென நமது பொதுச் செயலாளர் வலியுறுத்தினர். மேலும் அவர் தொடர்ந்து தொழில் உறவுப்பிரிவில் மானிலச் செயலாளர்கள் தொழில் கோட்டு மனு தயாரித்தல், நஸ்ட ஈடு, ஆபிடேசன் போன்ற மனுக்களை தயாரிக்க தெரிந்திருக்க வேண்டுமென கூறிய அவர், பேச்சுவார்த்தைகளுக்கு முன் ஏற்பாடுகள் அவசியம் தேவை என குறிப்பிட்டார். உயர்மட்ட கடிதத் தொடர்புகள் தலைமைச் செயலகத்தில் இருந்து அனுப்பப்படும். எனினும் முக்கிய கடிதத் தொடர்புகளை மானில அலுவலகங்கள் மேற்கொள்ள விரும்பின் தலைமை அலுவலக உத்தரவை பெறல் வேண்டும் என்றூர். அத்தோடு சட்ட உதவிகள் கோரும்போது தற்போது உள்ள நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென்றூர்.



மேற்படி கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன:—

I மானிலச் செயலாளர்கள் - மாவலி சஞ்சிகைக்கு, மானிலச் செய்திக்கடிதங்கள், தொழில் கோட்டு வழக்கு விபரங்கள் கட்டுரைகள் என்பனவற்றை மாதாந்தம் தவராது அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

II முக்கிய கடிதங்களை அனுமதிக்காக தலைமை காரியாலயங்களுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

III மானில, மாவட்ட கணக்கு விபரங்களை ஒழுங்காக பரிசீலித்தபின் தக்க ஆதாரத்தோடு தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

V தொழில் கோட்டு மனுக்கள், நஸ்ட ஈடு மனுக்கள் ஆகிய வற்றை பூர்த்தி செய்து தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்ப வேண்டும்.

நமது சங்கக் கொள்கை, நிர்வாகம் சம்பந்தமாகப் பேசிய திரு. ஸி. வி. வேலுப்பிள்ளை - மானிலச் செயலாளர்கள் தலைமை நிலையத்தின் நேரடிப் பிரதிநிதிகளாவர். எனவே இப்பொறுப்பை வகிக்கும் நமது மானிலச் செயலாளர்கள் நடுகு திறம்பட செயல் புரிய வேண்டும். நமது சங்க வளர்ச்சிக்கு வேலை செய்யும் போது மற்ற தொழில் சங்கங்களின் கொள்கைகளை கடைப்பிடியாது நமது நடுநிலை கொள்கைகளை கடைபிடிக்க வேண்டுமென்றும், அங்கத்தவர்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் கவனித்து அவர்களின் குறை பாடுகளை போக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

## உத்தியோகத்தர்கள் கூட்டம்

20-4-74 சனிக்கிழமை மேதின விழா சம்பந்தமாக தலைமைக் காரியாலயத்தில் நடந்த உத்தியோகத்தர் கூட்டத்திற்கு தலைவர். டி. அய்யாத்துரை அவர்கள் தலைமை தாங்கினர்.

இக் கூட்டம் தொழிலாளர்களின் இன்றைய வாழ்க்கை நிலையை நன்கு ஆராய்ந்தது. பின் வாழ்க்கைச் செலவு, போக்குவரத்து கட்டணம் ஆகிய வற்றின் உயர்வால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதை மனதில் கொண்டு, இம்முறை மேதின விழாவை தோட்டங்கள் தோறும் கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதம் தோட்டங்கள் தோறும் நடக்கும் மேதின விழாக்களில் கீழ் கண்ட மூன்று தீர்மானங்களை நிறைவேற்றி பிரதம மந்திரிக்கு அனுப்புவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## மேதினத் தீர்மானங்கள்

1 தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் ரூ. 142/90 கொடுக்க வேண்டுமென கடந்த நான்கு ஆண்டுகளாக கேட்டு வரும் இந்த கோரிக்கைக்கு அரசு இன்னும் திட்டமான ஒரு முடிவும் சொல்லா திருப்பது வருந்தத் தக்கது. எனவே இக் கோரிக்கை யை இன்னும் காலதாமதம் செய்யாமல் உடனடியாக தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்க வேண்டுமென இக் கூட்டம் கேட்டுக் கொள்கின்றது.

2 தற்போது நாட்சம்பளத்தில் 10 சதவீதம் அரசாங் கம் கூட்டியுள்ளதை நாம் வரவேற்கும் அதே வேளை யில் இந்த 10 சதவீத சம்பள உயர்வின் நன்மையை தொழிலாளர்கள் அடைய வேண்டுமாயின் வாரத்தில் ஆறு நாள் வேலையும் மாதத்தில் 26 நாள் வேலையும் கொடுக்க உடனடியாக சட்டம் கொண்டு வரவேண் டும். ஆறு நாள் வேலை கொடுக்க மறுக்கும் தோட் டங்களை தோட்டத் தொழில் அமைச்சு பொறுப் பேற்று நடத்த வேண்டுமென இக் கூட்டம் கேட்டுக் கொள்கின்றது.

3 உணவுற்பத்தியில் தோட்டங்கள் ஈடுபட பல முயற் சிகள் செய்திருந்தும் இவைகள் திருப்திகரமாக நடத் தப்பட வில்லை. உணவுப் பற்றுக் குறையில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் தொழிலாளர்களே. எனவே தோட்டங்களில் உணவுற்பத்தியைப் பெருக்க ஒரு முக்கூட்டுக் குழுவை அமைக்க வேண்டுமென இக்கூட் டம் கேட்டுக் கொள்கின்றது. இந்த முக்கூட்டுக் குழு வில் அரசாங்கப் பிரதிநிதி, தோட்ட முதலாளிப் பிர திநிதி, தொழிற்சங்கப் பிரதிநிதி ஆகியோர் அங்கம் வகிக்க வேண்டும்.

4 அண்மையில் நமது நாட்டில் பிற்போக்கு சக்திகளின் சதித் திட்டங்களை முறியடிக்க அரசு எடுத்த எல்லா நடவடிக்கைகளிலும் தோட்டத் தொழிலாளர்கள் தங் களின் பூரண ஒத்துழைப்பைக் கொடுத்தார்கள். ஆக வே தோட்டத் தொழிலாளரின் உணவு, மாதச் சம் பளம் முதலிய கோரிக்கைகளை கொடுப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இக் கூட்டம் கேட்டுக் கொள்கின்றது.



மேற்படி கூட்டத்தில் திருவாளர்கள் வி. வி. வேலுப் பிள்ளை பொதுச் செயலாளர் பி.வி. கந்தையா, அரசியல் காரிய தரிசி பி. பெருமாள், நிதிச் செயலாளர் கே. வி. வெள்ளசாமி; உபதலைவர்கள்: ஏ. கெங்கன். பி. ராமையா, எஸ். ஜெபமாலை, எஸ். கே. களியபெருமாள் கூட்டுச் செயலாளர் பெரியசாமி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

## வேலையும் லீவுச் சம்பளமும்

கலகா மாவட்டத்திலுள்ள ஹோப் தோட்டத்தைச் சேர்ந்த திரு. பி. அரசன் கங்காணியின் தொழில் வழக்கு 11-3-74ல் கண்டி தொழில் கோட்டில் நடைபெற்றது.

இவரை வேலையில் இருந்து நிறுத்தியது சம்பந்தமாக இக்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவருக்கு திரும்ப வும் வேலையும் நிறுத்தப்பட்ட காலத்திற்கு லீவுச் சம்பளமும் வழங்கப்பட வேண்டுமென கண்டி தொழில் கோட்டுத் தலைவர் தீர்ப்பு வழங்கினார்.

## சேவை காலப்பணம்

சென் எலியாஸ் தோட்டத்தைச் சேர்ந்த அன்னம்மா ளின் வேலை நீக்கம் சம்பந்தமாக எமது சங்கம் தாக்கல் செய் திருந்த தொழில் வழக்கு விசாரணை அட்டன் தொழில் கோட் டில் நடைபெற்றது.

அன்னம்மாளுக்கு ரூ 285/- சேவைகாலப் பணமாக வழங் கப்பட வேண்டுமென தொழில் கோட்டுத் தலைவர் தீர்ப்புவழங் கினார். இத்தொகையை தோட்ட நிர்வாகம் 6-9-74 முன் வழங்குவதாக ஒப்புக் கொண்டது. திரு. எஸ். பி. ரெட்டியார் இவ்வழக்கை நடத்தினார்.

குறிப்பு: இடமின்மையால் எல்லா தொழில் கோட்டு வெற்றிகளை யும் பிரசுரிக்க முடியாமைக்காக வருந்துகின்றோம்.

---

## வருந்துகின்றோம்.

எதிர்பாராத சில காரணங்களால் இவ்விதழில் செய் திக் கடிதத்தை பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். அடுத்த இதழில் தவறாது செய்திக் கடிதம் இடம் பெறும்.

— ஆசிரியர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைக்காசு ( சதக்காசு ) கொழுந்துக்கு

## 15 சதம் வேண்டும்.

கொழுந்தெடுக்கும் பெண் தொழிலாளி தனது பெயருக்கு மேல் எடுக்கும் கொழுந்துக்காக கொடுக்கப்படும் சதக்காசின் தொகை கடந்த இருபது வருடங்களாக கூட்டிக் கொடுக்கப்படவில்லை. மேலும் கொழுந்து காலங்களில் தோட்ட நிர்வாகம் இவர்களை காலையிலோ மாலையிலோ கைக்காசுக்கு கொழுந்து எடுக்கச் சொல்லும் போது அவர்களது வீட்டு வேலைகளையும், பிள்ளைகளையும் கவனியாது போக நேருகின்து. இதற்காகக் கொடுக்கப்படும் கைக்காசு ரேட் பயன் தருவதாகவோ அல்லது அவர்கள் செய்த வேலைக்கு தக்கபடியாகவோ அமையவில்லை.

அதோடு வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ள இவ் வேலையில் ஒரு றாத்தல் கொழுந்துக்கு 15 சதம் வழங்க தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தைக் கோரும்படி நமது பொதுச் செயலாளர் திரு. பி. வி. கந்தையா தொழில் கமிசனுக்கு விண்ணப்பித்துள்ளார்.

---

## எல்லோருக்கும் வேலை வேண்டும் !

— வேலை செய்யும் உரிமை உண்மையாகவே எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென்றால், ஒவ்வொரு தனிமனிதனும் நாட்டின் அபிவிருத்தி வேலையில் தீவிரமாக ஈடுபட வேண்டும். இதில் அவன் தீவிரமாக ஈடுபடுவதற்கான ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அவனுக்குச் சமுதாயமே அளிக்கவேண்டும் அதாவது, தனிமனிதனின் நல்வாழ்வுக்குச் சமூகம் பொறுப்பேற்க வேண்டும். இப்பொறுப்பைச் சமூகம் வரவர இப்போது அதிகமாக ஏற்று வருகிறது. வேலை வாய்ப்புகள் அளிப்பதைத் தவிர, மற்ற பல துறைகளிலும் அவனுக்குக் குறைந்த பட்சப் பாதுகாப்பையாவது அளிப்பது சமுதாயத்தின் கடமை.

— டேவிட். ஏ. மோர்ஸ் —



# திண்ணை

( — சாவி — )

மேட்டுலயத்தில் இரண்டாவது காம்பரா. கதவுக்கு வெளியில் உள்ளது மண்திண்ணை- இதுதான் நமது தொழிலாளர்களின் சாய்வு நாற்காலி, சனிக்கிழமை மெய்யனும், அவன் மனைவி அஞ்சலையும் திண்ணையில் அமர்ந்து விறகுக்கட்டுகளின் மேல் கால்களை பரக்க நீட்டிக் கொண்டு:—

**அஞ்:-** என்னங்க ஆராயி அப்பன் இன்னைக்கு புதுசா ஒஞ்சு ஒக்காந்திட்டீங்க! கடை சுத்தபோகலையா!

**மெ:-** எடக்கு மொடக்கா பேசாதே! என்னைத் தேடிக்கிட்டு நம்ப தலைவரு வாராரு. அந்தக்காலத்திலே டயகாமம் மெய்யன் தலைவருன்னு அழுத புள்ளே சிரிக்கும். பொண்டுக என் பேரைவச்சு தானுனே கொட்டுவாக.

**அஞ்:-** அடி ஆத்தே! ஒங்க வயசுக்கு இனியுமா - சங்கமும் தலைவரு வேலையும் சும்மா வீட்டு வேலையைப் பார்க்காமே! இனி சங்கத்தாலே ஆவதென்ன நமக்கு.

**மெ:-** நாலு எழுத்து படிச்சிருந்தா ஒனக்கு நம்ப நெல தெரியும். நாலு பயணம் சம்பள ஒயர்வு கெடைச்சிருக்கு. ஆனா வீட்டுக்கு பணமா வரலே - ஒனக்கு தெரியலே - எல்லாம் சங்கமுன்னு ஒன்று இல்லாட்டி, இல்லே புள்ளே! நீ காலையிலே சுட்டே பாரு ஆட்டாமாவு தோசே அதுவும் சங்கம் கொடுத்த மாவுனு நெனவுலே வெச்சுக்கோ.

**அஞ்:-** எந்த சங்கங்க இதே செஞ்சிச்சு அவ்வளவு ரோசமா ?

**மெ:-** நாட்டுலே அரிசியை நெருத்துன்ன ஒடனே. அரசாங்கத்தோட நல்லதுக்கு மட்டும் சேர்ந்து ஒழைக்கிற சங்கங்கள் நம்ப நெலையை, பசியை கவர்மந்துக்கு எடுத்துச் சொல்லி ஆளுக்கு ஒரு றாத்த ஆட்டாமாவு மேலதிகமா கொடுக்கச் செஞ்சாங்க. 'அதுலே முக்கியமா பேசுனது தொழிலாளர் தேசிய சங்கமுன்னு ஒன்னு இருக்கு புள்ளே அதோட தலைவருதான் வாராரு.

**அஞ்:-** புதுசு புதுசா புட்டு வைக்கிறீங்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெ:- புதுசு இல்லே புள்ளே பழைய சங்கம். நம்ப எலங்கையிலே நம்பளுக்கு நல்லதையா செஞ்சி கிட்டுவர்ர சங்கம். செய்யப் போற சங்கம்.

அஞ்:- ஓங்கப்பன் தன்ஞனே! வெளக்கமாத்தான் சொல்லுவிகளா ? ஆந்தே மாதிரி முழுங்கி கிட்டு......!

மெ:- அந்தக் காலத்திலே பெரியசுந்தரம் நம்பளுக்கு நல்ல சட்டதிட்டங்களை செய்து தொழிலாளிக்கு பல நன்மைகளைச் செஞ்சாரு. அப்பரம் தலைவருன்னு வந்தவங்க செலது செஞ்சாங்க. ஆனல் நம்பளுக்கு உருப்படியா ஒன்றும் செய்யலே! 1965 லே. வி. கே. வெள்ளையன்னு ஒரு தலைவரு நம்ப சமுதாயத்திலே வந்தாரு. அவரு புள்ளே 1969 ல் ஓங்கப்பன் தோட்டம் மஸ்கொலையில் கவர்மண்டு டங்கி கட்டுச்சுப்பாருலயிட்டுப்போட, அப்போ ஆளுகளை எல்லாம் தொரையும், அரசாங்கமும் வெளியே தோட்டத்தேவிட்டுன்னுட்டாங்க (போ) ஆளுக தவியா தவிச்சாங்க, சங்கம் சங்கமா அலைஞ்சாங்க. எல்லாச்சங்கமும் கையை விரிச்சுப்புடுச்சு. காரியம் நடக்கலே. வெள்ளையன் பார்த்தாரு. ஆளுகளுக்கு அபயமளித்தாரு. தொரை மேலே வழக்கை போட்டாரு. தொரை செஞ்சது சட்டத்திற்கும், தர்மத்துக்கும் வெரோத முன்னு வெத்தி கெடைச்சிச்சு. ஆனு! பாவி தொரை பணத்தை கொடுக்காமே அப்பீலு பண்ணிப்புட்டான்.

அஞ்:- என்ன பணங்க ! புதுசா இருக்கே ?

மெ:- சேவைகால பணம் புள்ளே! ஓங்கப்பன் போன வருசம் மாடுபுடிச்சாரே அந்தப் பணம். அவரு நம்பளுக்கு செஞ்சிட்டு போனதிலே உருப்படியான திட்டம் அதை சட்டமாக்கணும்னு போராடிய வரு. எத்தனையோ மலைமலையா செய்ய இருந்தவரு நம்பல தவிக்க விட்டுட்டு போயிட்டாரு. செத்தும் கொடுத்த சீதைக்காதி மாதிரி தான் செத்தும் நல்ல திட்டங்களை எழுதி வச்சிட்டு போயிட்டாரு.

அஞ்:- நெருத்திப்புட்டிகளே ! நேரம் போரதே தெரியலேயே சருவ கொஞ்சம் போட்டு கிட்டு சொல்லுங்களே.



மெ:- மனச நோவுது புள்ளே ! இன்னும் அவரு எழுதிவச்சிட்டுப்போனதிலே நம்பளுக்கு மாதச்சம்பளம், கெழமைக்கு ஆறுநாள் வேலை கொடுக்கோனுமினு வாதாடினர். ஒரு நாளைக்கு ஆறு மணி நேர வேலை இப்படி பலமாதிரி நன்மையான திஸ்டங்களை விடாமே இச் சங்கத்திலே செய்யருங்க!...

அஞ்:- ஒரு நாளைக்கு ஆறுமணி நேர வேலையா ! கைகாசுக்கு கொழுந்தெடுக்க ஏலாதே ! நட்ட முள்ள நமக்கு. பொண்டுக கேக்க மாட்டாங்களே.

மெ:- வந்துட்டியே ஒன் பழைய கதைக்கு. கொஞ்சம் ஓசிச்சியா ? கொழுந்து காலத்திலே தொரை கைகாசுக்கு கொழுந்து எடுன்னுப் போதும் பொம்புளே சோத்த மறந்திடுவா. லவ்வா லவ்வான்னு புடுங்கிப்பிடுவா புடுங்கி. கொழுந்து ஒஞ்சி போச்சா? இன்னிக்கு மாதிரி வூட்டுலே ஒக்காந்துகிட்டு பொரணிபேசரது. ஏன் இந்த பழக்கம். நாம நல்லா ஆறுமணி நேர வேலையிலே கொழுந்த எடுக்கிறது. பேருக்குப் போவ மீதியை கைக்காசுக்குப் போடுறது. மலையிலே கொழுந்திருந்தா கெழமைக்கு ஆறு நாள் வேலை வருது இன்னம் வெய்யிலு காலத்திலே ஆறு நாள் வேலைக்கும் இது வழிகாட்டும். வேலையைக் குறைக்கிறதுக்குத்தான் புள்ளே கைக்காசு வேலை வைக்கிறது.

அஞ்:- அடி ஆத்தே ! தொரைமாரோட சூத்திரமாத்திரக் கதை இப்பத்தானே புரியுது. சரி தலைவரு வருவாருனீகளே ! நம்ப வீட்டுக்கு வருவாரா இல்லே கோயிலு பொட்டலிலேயே...?

மெ:- நம்ப ஆளுடி அவரு - நம்ப வீட்டுக்கே வருவாரு. என்னைப் போல ஒரு தொழிலாளி - நான் இருந்த சங்கத்திலே ஒரு தொழிலாளி தலைவரா இருக்கிறது நான் புதுசா சேரப் போர சங்கத்திலேதான்.

அஞ்:- அப்ப வீட்டை கூட்டிப்புடுறேன். வந்த ஒடனே இன்னம் வெவரமா கேட்டுக்கிறலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுப்புற சூழ்நிலை

"தொழிலாளர்கள் வாழும் வீடுகள் சிப்பாய்களின் வாடி வீடுகளைப் போன்றது இவைகள் "லயன்கள்" என்று அழைக்கப்படுகின்றன. ஒரு நீண்ட கட்டிடத்தை 10' x 12' என்ற வீதத்தில் அறைகளாகத் தடுத்து முன்புறம் எல்லோருக்கும் ஒரு பொதுவான நீண்ட விருந்தாவைக் கொண்டதாகும். இதில் ஒற்றை லயம், இரட்டை லயம் என இரு வகைகள் உண்டு. கூரை தகரத்தாலும், தரை அனேகமாக சாணத்தாலும் மொழுகப்பட்டு இருக்கும். பின்புறம் ஒரு அறைக்கு ஒரு சன்னல் மட்டுமே வைக்கப்பட்டு உள்ளது. இவ்விதம் கட்டப்பட்ட லயன்களில் 40% மானவை மிக மிகப்பழமையானவை. மனிதன் சுகசீவியாக வசிப்பதற்கு லாயக்கற்றவை" என்று சுகாதார இலகாவின் வைத்திய அறிக்கை கூறுகின்றது.

லயன்களைச் சுற்றி காணுகள் உண்டு. இக்காணுகளில் அசுத்தம் நிறைந்த துர்நாற்றம் வீசும் நீர் குழிகளில் தேங்கி வழிந்தோடிக் கொண்டுமிருக்கும். இவ்வாறு அசுத்தம் நிறைந்த லயன்களில் ஒரு தொழிலாளியின் குடும்பத்திற்கு, ஆள் எண்ணிக்கையைப் பாராது 10' x 12' என்ற வீதத்தில் உள்ள (காம்பரா) அறை ஒன்று கொடுக்கப்படும். இதில் அவனின் குடும்பமும் விருந்தாக வருவோரும் தங்கிச் செல்ல வேண்டும். சில தோட்டங்களில் இதை இரு பாகங்களாகத் தடுத்து இரு குடும்பங்கள் சீவிப்பதற்கு கொடுத்திருப்பதைக் காணலாம்.

தனி வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம் அமுலில் வந்துள்ளது. ஆனால் இத்துறையின் ஆக்க வேலைகள் பின்தங்கிய நிலையில் உள்ளது. எல்லோருக்கும் புதிய முறையான வீடுகளை வழங்குவது சிரமமான ஒரு காரியமாகும். இதே வேலையில் இப்படியான புதிய முறை வீடுகளும் சனப் பெருக்கத்தின் காரணமாக அசுத்தம் அடைய வழிவகைகள் ஏற்படும்.

## குப்பைகள்

குப்பைகளை அகற்றும் வேலை எப்போதும் நல்ல முறையில் துப்பரவு செய்யப் படுவதில்லை. இவ்வேலைகளை துரிதமாகவும், ஒழுங்காகவும் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தால் தோட்டத் தொழிலாளர் மத்தியில் அடிக்கடி தோன்றும் நெருப்புக் காச்சல், வயிற்ருேற்றம் போன்ற தொற்று நோய்களைத் தடை செய்யலாம்.

## குடிதண்ணீர் வினியோகம்

குடி நீர் வினியோகம் குழாய் மூலமாக நடைபெறுகின்றது. ஆனால் குடி தண்ணீரைத் தேக்கிவைக்கக் கட்டப்பட்டுள்ள டங்கிகளும், ஊற்றுக் கிணறுகளும் நல்ல முறையில் பாதுகாக்கப்படுவதில்லை.

வண: பிதா ஆஞ்ரிலோ
ஸ்டெப்பென்ஸ். எஸ். ஜே.

## வேலை நாட்கள்

சுகாதார சீர்கேட்டின் காரணமாக 1963ம் ஆண்டு ஒரு தொழிலாளி 8.3 % தனது வேலையில் இழந்துள்ளான். இது 1964ம் ஆண்டில் 9.1% உயர்ந்துள்ளது என்று 'புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

தோட்டங்களில் தொழிலாளர்களின் வாழ்க்கையையும், துரைமார்களின் வாழ்க்கை வசதிகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஒரு மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காணலாம். துரைமார் தங்கள் வாழ்க்கை வசதிகளுக்கு அமைத்துக் கொண்ட பங்களாக்களில் ராஜபோகத்தோடு வாழ்வதைக் காணலாம்.

அரசு முதலாவதாக தொழிலாளர்களுடைய வாழ்க்கை முறையை மாற்றி, சீர் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். கடந்த 10 வருடங்களாக சமூகப் பிரச்சினைகளில் ஒரு மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. புதிய வசதிகளோடு வீடுகள் வேண்டும் என்ற கோரிக்கை தாக்கம் பெற்று வந்துள்ளது.

இச்சீர் கேட்டைப் பற்றி தொழில் சங்கங்கள் சுகாதார அமைச்சருக்கு சமர்ப்பித்த அறிக்கை கூறுவதாவது.

"நாட்டில் உள்ள ஏனைய சமூகத்தின் இறப்பு விகிதத்தையும் தோட்டத் தொழிலாளர்களுடைய இறப்பு விகிதத்தையும் ஒப்பிட்டு பார்க்கும்போது தோட்டப்புறங்களில் இறப்பு விகிதம் இலங்கை வாழ்மற்ற சமூகத்தினரை விட இரண்டு மடங்கு அதிகமாக இருக்கின்றது. இது தோட்டப்பகுதிகளில் உள்ள வைத்திய சேவை, ஆரோக்கிய சேவை ஆகியவற்றின் சீரற்ற தன்மையை எடுத்துக் காட்டுகின்றது. சிசு மரண விகிதமும் இரண்டு பங்காக உள்ளது. இதைக் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. இந்நாட்டின் மற்றவர்களுக்குச் அரசு செய்யும் இலவச வைத்தியங்கள் வைத்திய போதனைகளை, தொழிலாளர்கள் பயணடையும் வகையில் செய்ய அரசு தக்க வழி வகைகளை கடைப்பிடிக்கவில்லை என்றதைக் காட்டுகின்றது. இதோடு தோட்ட முதலாளிமார்கள் தோட்டங்களில் பிரசவ வசதிக்கான வசதிகளைச் செய்யாது, தற்போது உள்ள வசதிகளையும் உருப்படியாக செய்யவில்லை.

இரண்டாவதாக, குடிநீர் பிரச்சினை எல்லாத் தோட்டங்களிலும் சீரற்ற வகையில் செயல்பட்டு வருகின்றது. தண்ணீர் டங்கிகள் ஒழுங்காக கட்டப்படாமலும், டங்கிகளைச் சுற்றி உள்ள பகுதிகள் அசுத்தம் நிறம்பியதாகவும் உள்ளது. மலசலக் கூடங்களைப் பொறுத்தவரையில் எல்லா வகைகளிலும் மிகவும் சீர்கேடாக உள்ளது."

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு வாழ்த்து

## ஆனந்த வருடம் ஆக்கமும் ஊக்கமும் தருக

— தலைவர். டி. அய்யாத்துரை —

தொழிலாளர் மத்தியில் ஐக்கியமும், தோழமையும் தோன்ற செயல் பட்டு உழைக்க வேண்டும். தொழிலாளர்களின் சக்தியைப் பலப்படுத்த ஆனந்த வருடம் ஆக்கமும், ஊக்கமும் தரும் என்ற நம்பிக்கை தோன்ற பிரமாதீச வருடத்திற்கு வணக்கம் கூறி, ஆனந்த வருடத்தை வரவேற்போமாக. புத்தாண்டில் தோட்ட மக்களின் வறுமை, பசி, பட்டினி நீங்கி ஊதிய உயர்வு அடைந்து நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

— பொருளாதார முன்னேற்றத்திற்கு முன்னால் சமூக உயர்வுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். நீதியை நிலை நாட்டுவதற்கு இதைவிடச் சிறந்த வழி எதுவுமில்லை.

— ஆல்பர்ட் தாமஸ் —



முன் இதழ் தொடர்ச்சி

## இலங்கைத் தொழில் துறைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்யப்படுவது சம்பந்தமான சட்டங்களை ஆராயும் கட்டுரை

கட்டுரை ஆசிரியர்
ஆர். தியாகராஜா
உதவி தொழில் கமிசனர்

நாடு சுதந்திர மடைந்தவுடன் பல முற்போக்கு தொழில் சட்டங்கள் உருவாக்கப்பட்டதோடு சில தொழில் சட்டங்கள் புணரமைப்பும் செய்யப்பட்டது. இதற்குப் பிறகு, ஒரு முதலாளிதான் விரும்பும் ஒரு தொழிலாளியை நினைத்த சமயத்தில் வேலை நீக்கம் செய்து விட்டு, சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

சட்டப்படி வேலை நீக்கம் செய்வது சம்பந்தமாக சக்கரவர்த்தி சொல்லியது போல் தனிப்பட்டவர்களின் தனித்துவமும், தனிப்பட்ட ஒப்பந்தங்களும் நமது பல தரப்பட்ட சட்டங்களும் சீர் திருத்தப்பட்டுள்ளது. இவைகளில் சில மறைந்து கொண்டிருக்கின்றன. இன்னும் எத்தனை மறையுமெனத் தெரியவில்லை.

தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்யும்போது பாதுகாப்பும், நீதியும், நியாயமும் வழங்க முதலாவதாக 1950ம் ஆண்டு தான் கைத்தொழில் தகராறு சட்டம் உருவாக்கப்பட்டது. இச்சட்டம் ஆரம்ப காலத்தில் தொழிலாளர்களும், தொழில் சங்கங்களும் முதலாளிமார்களோடு தொழில் தகராறுகளையும் வேலை நீக்கம் சம்பந்தமான பிரச்சினைகளையும் மத்தியஸ்தர் கைத்தொழில் நீதி மன்றங்களின் மூலமாக தீர்த்துக் கொள்ள வழி வகுத்தன.

1957ம் ஆண்டு இச்சட்டத்தில் (4ஏ) பகுதி உருவாக்கப்பட்டது. இச்சட்டம் ஒரு தலைவரை (நீதிபதி) கொண்ட தொழில் நீதி மன்றங்களை அமைக்க கொண்டு வரப்பட்டது. இப்போது நாட்டின் பல பகுதிகளிலும் 17 (பதினேழு) தொழில் நீதி மன்றங்கள் இருக்கின்றன. இந்த தொழில் நீதி மன்றங்களுக்கும் தொழிலாளிகளை வேலை நீக்கம் செய்தாலோ, வேலையிலிருந்து விலகினாலோ விசாரணை செய்து தீர்ப்பு வழங்க இச்சட்டம் அதிகாரம் அளித்துள்ளது.

இச்சட்டத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால் ஒரு தொழிலாளியை, முதலாளி

தமிழில்
பி. வி. கந்தையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை நீக்கம் செய்தால் அவன் நேரடியாக இச்சட்டத்தின் 31(பி) பிரிவின்படி நியாயம் கேட்டு தொழில் நீதி மன்றம் செல்ல முடியும். அண்மையில் இச்சட்டத்தில் கொண்டு வந்த ஒரு புதிய திருத்தத்தின்படி ஒரு தொழிலாளி, தொழில் நீதி மன்றத்திற்கு வேலை நீக்கம். செய்த திகதியிலிருந்தோ அல்லது வேலையிலிருந்து விழகிய திகதியிலிருந்தோ ஆறு மாதங்களுக்குள் மனுச் செய்ய வேண்டும்.

நாட்டிலுள்ள சிவில் நீதி மன்ற பொதுச் சட்டத்திற்கும், கைத்தொழில் தகராறு சட்டத்திற்கும் வேறுபாடுகள் உண்டு. சிவில் நீதி மன்றத்தில் வேலை நீக்கம் செய்வது, வேலை ஒப்பந்தத்திற்கு விரோதமான தோடு, பரிகாரம் தேடும்போது குறிப்பிட்ட பிரச்சினைக்கேதான் பரிகாரம் கேட்க முடியும். ஆனால் தொழில் நீதி மன்றங்களிலோ, கைத்தொழில் நீதி மன்றங்களிலோ, மத்தியஸ்தர் மன்றங்களிலோ வேலையுடன் வேலை நீக்கக் காலத்திற்குறிய சம்பளம் அல்லது வேலைக்குப் பதிலாக நஸ்ட ஈடு, நோட்டீஸ் காலச் சம்பளம் அல்லது சேவைக்காலப் பணம் கேட்க முடியும்.

முதலாளிக்கும், தொழிலாளிக்குமிடையே வேலை ஒப்பந்த அடிப்படையில் அல்லாமல் கூட தொழில் நீதி மன்றங்கள் நீதி வழங்க முடியும். [பகுதி 31 (பி-4) ] இப்படி ஒரு சிவில் கோர்ட் செய்ய முடியாது.

இறுதியாக இந்நாட்டிலுள்ள வேலை நீக்கம், தொழில் உறவு சம்பந்தமான சட்டங்கள், சர்வதேச தொழில் ஸ்தாபன சிபார்சின் 119 வது சரத்தை தழுவியுள்ளது. இக் கொள்கை, தகுதி ஆகியவை இச்சட்டத்தில் அமைய வில்லையாயினும், வேலை நீக்கம் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும். தொழில் காரியாலயம் தொழில் நீதி மன்றம் ஏனைய ஸ்பானங்கள் ஆகியவைகளுக்கு மேல்படி கொள்கைகளை அனுஸ்டிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

—முற்றும்—

---

காந்திஜி ஒரு முறை ஷிமோகாவுக்குப் போயிருந்தபோது காகா கலேல்கர் அவரைப் பார்த்து தாங்கள் கெரஸ்பா நீர் வீழ்ச்சியை அவசியம் பார்க்க வேண்டும். அதைப்பார்ப்பதற்காக வென்றே முன்பு லார்ட் கர்ஸன் இந்தப் பக்கமாக வந்தாராம். "எனக்கு நிறைய வேலை இருக்கிறதே" என்றார் காந்திஜி. "உங்களுக்கு எப்போதும் வேலை இருந்து கொண்டேதான் இருக்கும். இவ்வளவு சமீபத்தில் வந்த பிறகு அதைப் பார்க்காமல் போகக் கூடாது. உலகத்திலேயே அற்புதக் காட்சி அது. கெரஸ்பா நீர் வீழ்ச்சி, நயகரா நீர் வீழ்ச்சியை விட ஆறு மடங்கு உயரம், 960 அடி உயரத்திலிருந்து தண்ணீர் விழுகின்றது," என்று கலேல்கர் மீண்டும் வற்புறுத்தினார். "பூ! இவ்வளவுதானா' மழைத் தண்ணீர் ஆகாயத்திலிருந்து கொட்டுகிறதே அதை விடவா இது ஆச்சரியம்," என்றார்.

# கதறி மனம் குமுறுதம்மா

— எல். ஸ்ரீஸ்கந்தராஜா —

கண்டிச் சீமையிலே
    கவலையின்றி வாழவென
அண்டியிங்கு வந்து
    அனாதையாய் திரும்புகின்ற
பெண்டீர் பிள்ளை
    பெரியோர் நிலைகாண
கண்ணீர் பெருகுதம்மா
    கதறி மனம் குமுறுதம்மா

கங்காணி பின்னாலே
    கால் தேய நடந்து வந்து
வேங்கை புலி கரடி
    வெறிகண்ட காடுகளை
எங்கும் பசுமையினால் - எழில்
    ஆக்கியோர் நிலைகண்டு
கண்ணீர் பெருகுதம்மா
    கதறி மனம் குமுறுதம்மா

நெஞ்சு பொருக்குதில்லை
    என்றுரைத்த பாரதியின்
கொஞ்சு தமிழ் நாட்டினுக்கு
    குடிபெயரும் நம் கூட்டம்
கெஞ்சியங்கு அடைகின்ற
    அவல நிலை கேட்டு
கண்ணீர் பெருகுதம்மா
    கதறி மனம் குமுறுதம்மா

# கேள்வி ? - பதில் !

## " உண்மை விளம்பி "

வாசகர்களே, உங்கள் கேள்விகளுக்கு "உண்மை விளம்பி" பதில் அளிப்பார். உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:—

" உண்மை விளம்பி "
மாவலி
618- 3/3, காலி வீதி,
த. பெ. எண் -13
கொழும்பு 3.

---

வி. சாமி. வெஞ்சர், கீ. பி. நோர்வுட்.

கே:- மலையக மக்களை ஆளும் கட்சிகள் புறக்கணிப்பதேன்.

ப:- ஆளும் கட்சிகள் மட்டுமா புறக்கணித்தன. எல்லாக் கட்சிகளுமே மலைநாட்டு மக்களை புறக்கணித்து வந்துள்ளன.

ஐயாக்கண்ணு. கயப்புகொல்லை, பூண்டுலோயா

கே:- கொழும்பு நூதனசாலையில் மலைநாட்டு கலை, கலாச்சாரச் சின்னங்களைக் காணோமே!

ப:- நாம் ஒதுக்கப்பட்ட இனம் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது

சாமிநாதன், பாராண்டா, கொத்மலை

கே:- அரசு உணவு உற்பத்தியை பெருக்கச் சொல்கின்றது. ஆனால் மலைநாட்டு தோட்டத் தொழிலாளர்களுக்கு மரக் கறிவிதைகள் வழங்க வழி செய்ய வில்லையே! நமது சங்கம் செய்யுமா?

ப:- நல்ல கேள்வி. நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

எஸ். வி. ராமசாமி, மூலன் தோட்டம், லெத்தண்டி குரூப், அட்டன்

கே:- தலையில் இரட்டைச்சுழி உள்ளவர்களை நம்பலாமா ?



ப:- உங்கள் மனதில் சந்தேகமில்லாவிட்டால் நம்பலாம்.

எஸ். கிருஷ்ணமூர்த்தி. ஓப்தோட்டம், ஏவாஹெட்ட

கே:- யூ. என். பி. மலையகத்தில் தொழில் சங்கம் அமைப்பதின் மர்மம் என்ன ?

ப:- படை திரட்டி, " கடை " வைக்க

கே:- மறைந்த தலைவரான திரு. வி. கே. வெள்ளையன் திருமணம் புரியாதிருந்த காரணம் ?

ப:- குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டால் சமூகத்திற்கு சேவை செய்ய முடியாது என்ற காரணத்தால்.

பி. மணிவண்ணன். சரவணஸ், 49 கொத்மலை வீதி, நாவலப்பிட்டி.

கே:- நமது ஈழநாட்டில் உணவு நெருக்கடி உச்ச கட்டத்தை அடைந்து கொண்டிருக்கும் வேளையில் நமது மலைநாட்டின் நிலை.

ப:- பரிதாபத்துக்குறிய நிலைதான்.

ஆர். கிருஷ்ணவேணி, கண்டி.

கே:- மலைநாட்டின் எழுச்சிக்கு வித்திட்ட தலைவன் யார் ?

ப:- முன் திரு. காரமுத்துத் தியாகராஜன் செட்டியார் பின் திரு. கே. நடேசையர்.

கே. சுகுமார். பொகாவத்தை, பத்தனை.

கே:- திரு. வெள்ளையனின் இலட்சியங்கள் உயிர் உள்ளவை என்பதற்கு......?

ப:- மாதச் சம்பளம் 6 மணி நேர வேலை. தொழிலாளர்களே தொழில் சங்கத்தை நடத்துவது. -உதாரணங்களாகும்.

கே. இராமன். ஓப் எஸ்டேட், ஏவாஹெட்ட.

கே:- தோட்டத் தொழிலாளர்கள் புறக்கணிக்கப்பட்ட சமுதாயமாக கருதப்படுகிறார்களே !

ப:- ஓட்டு உரிமை இல்லாதது தான் முழு முதல் காரணம்.

ஐ. இராமசாமி. கயிறுகட்டி, ரம்பொட.

கே:- மலைநாடு பூராவும் தொழிலாளர் தேசிய சங்கத்தால் ஆளப் பட்டால்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப:- தொழிலாளர்கள் சுபீட்சத்தோடும், மனிதர்களாகவும் வாழ்வார்கள்.

கே. பாலு. அட்டன்

கே:- மலை நாட்டில் பசி, பட்டினி தாண்டவமாடும் போது தொழிலாளர் தேசிய சங்கம் அரசு சார்பு தொழிற்சங்கங்களுடன் சேர்ந்திருப்பதின் மர்மம் என்ன ?

ப: அரசோடும், அரசு சார்பு தொழிற்சங்கங்களுடனும் சேர்ந்திருப்பதின் நோக்கம், மலையக மக்களின் குறைபாடுகளை நற்புடமையோடு எடுத்தியம்பி நல்லதைச் செய்யலாம் என்ற நோக்கம் தான்.

வி. முத்துராமன். நோர்வுட்.

கே:- மனிதன் நிம்மதியாக தூங்குவதற்கு மார்க்கமென்ன ?

ப:- மனம் எந்த விஷயத்தையும் அரைகுறை யோடு கவனியாது, சம்பூரணமாக கவனித்து செயல் புரிந்தால் தூங்கும் போது வேறு சிந்தனைவராது. இதற்கு பெரும் சாதனை வேண்டும்.

எ. கிருஷ்ணசாமி, ஆல்வத்தை, கலகா.

கே- மலையகமக்களின் குலதெய்வம் எது ?

ப:- மாரி (மழை).

எஸ். இராமசாமி- கொத்மலை.

கே:- தொழிலாளர் தேசிய சங்கத்தை வழிநடத்தி செல்பவர்கள் யார் ?

ப:- தொழிலாளர்கள்தான்.

---

— ஏழு அங்குலம் நீளமுள்ள ஒரு பென்சிலால் கோடு இழுத்துக் கொண்டே போனால் 35 மைல் நீளமுள்ள கோடு போடலாம்! அந்தப் பென்சிலைக் கொண்டு சராசரி 45000 வார்த்தைகள் எழுதலாம். ஒரு பென்சில் செய்ய 40 விதமான பொருட்கள் தேவை. ஒரு மனிதன் தனிப்பட்ட முறையில் ஒரு பென்சில் தயார் செய்ய வேண்டுமானல் அதற்கு 400 ரூபாய் செலவாகும்!

— சரோஜா ராமச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவலிக்கு

# ஏஜன்டுகள் தேவை

மாவலி மாதம் தவறாது வெளிவரும் சஞ்சிகை. இன்றைய அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார சம்பந்தமான கட்டுரைகள். மலை நாட்டு மக்களின் சரித்திரம், அவர்கள் இந் நாட்டுக்குச் செய்த சேவைகளின் குறிப்புகள், தொழிலாளர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய தொழில் சட்டங்கள். வியாபாரத்துறையில் வேலை செய்யும் குமாஸ்த்தாக்கள், பணியாளர்கள், முதலாளிமார்கள், தெரிந்து கொள்ள வேண்டிய சட்டங்கள் மாவலியில் இடம் பெறுகின்றன.

பிரதி வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

நிர்வாக ஆசிரியர்
" மாவலி "
618 3/3 காலி வீதி
கொழும்பு - 3

அச்சக இடமாற்றத்தால் மாவலி தாமதமாக வருகின்றது. வாசகர்கள் மன்னிக்கவும்.

— ஆசிரியர் —

Published for the National union of workers, 618- 3/3 Galle Road Kollupitiya, Colombo, 3. and Printed at the Varuna Printers, Colombo - 10
Managing Editor. C. V. Velupillai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org